**செய்தி வெளியீடு எண்: 107/2023** **நாள்: 01.10.2023**

**பத்திரிக்கைச் செய்தி**

**அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாளை முன்னிட்டு தூய்மை சேவை பணியை சென்னை மெட்ரோ இரயிலின் இயக்குநர். ராஜேஷ் சதுர்வேதி தொடங்கி வைத்தார்.**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தில் அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாளை முன்னிட்டு துப்புரவு தூய்மை பணி சென்னை, கோயம்பேடு மெட்ரோ இரயில் நிலையத்தில் நடைபெற்றது. சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர் ராஜேஷ் சதுர்வேதி( அமைப்புகள் மற்றும் இயக்கம்) தூய்மை பணியை தொடக்கி வைத்தார்.**

**தூய்மையே சேவை குப்பையில்லா இந்தியா என்ற நோக்கில் நடைபெறும் இப்பணியால் குப்பையில்லா இடமாக இருக்க வேண்டும். தூய்மைப் பணி என்பது நம் ஒவ்வொருவரிடம் தனிப்பட்ட முறையில் இருக்க வேண்டும். இது தனிமனிதருக்கும், வீட்டிற்கும், நாட்டிற்கும் அவசியமாகிறது. துப்புரவு தூய்மை பணியை சேவை மணப்பான்மையுடன் ஒவ்வொருவரும் செய்தால் ஆரோக்கியமான வாழ்விற்கும் வழிவகுக்கும். இன்றைய காலகட்டத்தில் குப்பை இல்லாத நகரமாக மாற்றி அமைப்பது நம் கடமையமாக கொள்ள வேண்டும். இதனால் நாட்டிற்கு மட்டுமல்ல நம் வீட்டிற்கும், நமக்குமே ஒரு நல்வாழ்வுக்காக அமையும். இந்த துப்புரவு தூய்மை பணி 41 மெட்ரோ இரயில் நிலையங்கள், நிர்வாக அலுவலக கட்டிடம், 2 பணிமனைகள் மற்றும் அதன் சுற்றுப்புறத்திலும் மேற்கொள்ளப்படும் என்று பணியை தொடக்கி வைக்கும் போது இயக்குநர் ராஜேஷ் சதுர்வேதி தெரிவித்தார்.**

**இந்நிகழ்வில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் கூடுதல் பொது மேலாளர்கள் எஸ். சதீஷ்பிரபு (தொடர்வண்டி மற்றும் இயக்கம்), டி.பி. வினோத் குமார்( மனித வளம்) இணை பொதுமேலாளர் வி. விஜயவர்தன்( சந்தைப்படுத்துதல்), லட்சுமி (வருவாய் மேலாளர்), ரகுராமன் (துணை மேலாளர், மனிதவளம்), மற்றும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் உயர் அலுவலர்கள், பணியாளர்கள் என 350க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.**

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**